From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
S.T.C.No.31/2020

Deposition of witness for: PW - 3

| | | | |
|---|---|---|---|
| Name | : மாரியப்பன் | Father/Husband Name | : மகாலிங்கம் |
| Age | : | Calling | : |
| Date | : 26.11.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 26 day of 11.2025.

**( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).**

**எதிரிகள் ஆஜர்.**

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் தற்போது பெருங்குடி காவல் நிலையத்தில் காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 31.03.2019 ம் தேதி காலை 11.30 மணியளவில் மதுவிலக்கு மற்றும் குற்றதடுப்பு சம்மந்தமாக சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு. ராஜேந்திரன், மற்றும் நவநீதகிருஷ்ணன், கீழவளவு காவல் நிலைய சார்பு ஆய்வாளர் கோபிநாத், ஆகியோர்கள் மதுவிலக்கு மற்றும் குற்றதடுப்பு சம்மந்தமாக கீழையூர் – அட்டப்பட்டி ரோட்டில் ரோந்து செய்து வரும் போது பின்னால் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த கீழையூரைச்சேர்ந்த சுந்தரம் என்பவரின் மகன் கணேசன் என்பவர் தான் நடத்தி வரும் பெட்டிகடையில் வைத்து பிளாஸ்டிக் டம்ளரில் மது பானம் குடிக்க வருபவர்களுக்கு ஊத்திக்கொடுத்து கொண்டிருந்தார். அப்போது மதுபானம் குடித்து கொண்டிருந்தவர்கள் போலீஸ் பார்டியை கண்டதும் தப்பி ஓடிவிட்டார். மேற்படி கணேசன் என்பவரை விசாரிக்க மேற்படி நபர் அரசு அனுமதி பெறமால் தனது சுயலாபம் கருதி மதுபானம் குடிக்க வந்தவர்களிடம் மதுபானம் ஊற்றி கொடுத்துக்கொண்டு இருந்தார் என்பது தெரியவந்தால், அதே இடத்தில் காரணம் கூறி 11.30 மணிக்கு கைது செய்து, அங்கிருந்த ஒரு பிளாஸ்டிக் டம்ளரையும், மீதமிருந்த சுமார் 90 மிலி அளவுள்ள SNJ நம்பர் 1 பிராண்டி மதுபானத்தையும் எங்கள் முன்னிலையில் அத்தாட்சியில் 11.45

மணிக்கு கைப்பற்றி எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் 12.00 மணிக்கு நிலையம் வந்து வழக்கு பதிவு செய்ய உறுதுணையாக இருந்தோம். அந்நிலைய குற்ற எண் 94/2019 பிரிவு 4 (1)(k) TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்து எதிரியை பாரா வசம் ஒப்படைத்தபோது நான் உடன் இருந்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது ),** இது சம்மந்தமாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி ஆஜர்,**

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

தற்போது என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற அழைப்பாணையில் உள்ளதுபோல் கையொப்பம் செய்வேன் என்றால் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பம் 2019 ம் வருடத்தில் செய்தேன், காலபோக்கில் எனது கையொப்பத்தில் சிறு மாறுதல் ஏற்பட்டுள்ளது. கைப்பற்றுதல் மகஜரில் நான் கையெப்பம் செய்யவில்லை, வழக்கிற்காக பொய்யாக கையொப்பம் செய்ததாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு பொருட்களை கைப்பற்றியபோது நான் அங்கிருந்திருந்தால் எனது முன்னிலையில் கைப்பற்றப்பட்டது என்றும், எனது முகவரியும் அதில் இருந்திருக்கும் என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகஜரில் மந்தகாளை என்பவர் முன்னிலையில் கைப்பற்றப்பட்டதாக உள்ளது, எனது பெயர் இல்லை என்றால் சரிதான், எனது பெயருக்கு பதிலாக மந்தகாளை என்று பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. எனது முன்னிலையில் கைப்பற்றபட்டிருந்தால் எனது பெயர் அதில் குறிப்பிடப்படிருக்கும், எனது முன்னிலையில் கைப்பற்றபடாததால் எனது பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

2) சம்பவம் நடந்த அன்று நான் வேலையில் இருந்ததற்காக ஆதரவாக ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் GD சார்பு ஆய்வாளர் வசம் உள்ளது என்னிடம் இல்லை. என்னை இந்த வழக்கு சம்மந்தமாக எந்த உயர் அதிகாரி விசாரித்தார் என்றால் சார்பு ஆய்வாளர்

திரு.கோபிநாத் அவர்கள் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள், நேரம் ஞாபகம் இல்லை. நான் எதிரியை காவல் நிலையத்தில் ஒப்படைத்த பின்னர் நடந்த விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சொன்னதுபோல், சொன்னதேதியில், சொன்ன இடத்தில், எந்த சம்பவமும் நடைபெறவில்லை, நான் சம்பவம் இடத்திற்கு செல்லவில்லை, எனது மேல் அதிகாரி கேட்டுக்கொண்டதற்கிணங்க எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Deposition of witness for: PW - 2

Name : நவநீதகிருஷ்ணன் Father/Husband Name : பெரியசாமி

Age : Calling :

Date : 26.11.2025

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 26 day of 11.2025.

**( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).**

**எதிரிகள் ஆஜர்.**

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் மதுரை மாவட்டம், ஒத்தக்கடை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 31.03.2019ம் தேதி காலை 11.30 மணியளவில் மதுவிலக்கு மற்றும் குற்றதடுப்பு சம்மந்தமாக சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு. ராஜேந்திரன், மற்றும் காவலர் 324 மாரியப்பன், கீழவளவு காவல் நிலைய சார்பு ஆய்வாளர் கோபிநாத், ஆகியோர்கள் மதுவிலக்கு மற்றும் குற்றதடுப்பு சம்மந்தமாக கீழையூர் – அட்டப்பட்டி ரோட்டில் ரோந்து செய்து வரும் போது பின்னால் பெயர் விலாசம் கேட்டு தெரிந்து சுந்தரம் என்பவரின் மகன் கணேசன் என்பவர் தான் நடத்தி வரும் பெட்டிகடையில் வைத்து பிளாஸ்டிக் டம்ளரில் மதுபானம் குடிக்க வருபவர்களுக்கு ஊத்திக்கொடுத்து கொண்டிருந்தார். அப்போது மதுபானம் குடித்து கொண்டிருந்தவர்கள் போலீஸ் பார்டியை கண்டதும் தப்பி ஒடிவிட்டார். மேற்படி கணேசன் என்பவரை விசாரிக்க மேற்படி நபர் அரசு அனுமதி பெறமால் தனது சுயலாபம் கருதி மதுபானம் குடிக்க வந்தவர்களிடம் மதுபானம் ஊற்றி கொடுத்துக்கொண்டு இருந்தார் என்பது தெரியவந்தால், அதே இடத்தில் காரணம் கூறி 11.30 மணிக்கு கைது செய்து, அங்கிருந்த ஒரு பிளாஸ்டிக் டம்ளரையும், மீதமிருந்த சுமார் 90 மிலி அளவுள்ள SNJ நம்பர் 1 பிராண்டி மதுபானத்தையும் எங்கள் முன்னிலையில் அத்தாட்சியில் 11.45 மணிக்கு கைப்பற்றி எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் 12.00 மணிக்கு நிலையம் வந்து வழக்கு பதிவு செய்ய உறுதுணையாக இருந்தோம். அந்நிலைய குற்ற எண் 94/2019 பிரிவு 4 (1)(k) TNP Actன் கீழ் வழக்கு பதிவு செய்தார். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது

கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது ),** இது சம்மந்தமாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி ஆஜர்,**

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

தற்போது என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற அழைப்பாணையில் உள்ளதுபோல் கையொப்பம் செய்வேன் என்றால் தற்போது நீதிமன்றத்தில் அழைப்பாணையில் உள்ளது போல்தான் கையொப்பம் செய்வேன். சம்பவம் நடந்த அன்று நான் வேலையில் இருந்ததற்காக ஆதரவாக ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிரி சம்பவம் நடந்ததாக கூறப்படும் அன்று யாருக்கு மதுபானம் ஊற்றி கொடுத்தார் என்று எனது போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் அவர்கள் ஒடிவிட்டார்கள் என்று சொல்லியுள்ளேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் கீழையூர் – அட்டப்பட்டி பகுதீ ஜன நெருக்கடி அதிகம் உள்ள இடம் என்றால் சரிதான். போலீசார்களை தவிர வேறு எந்த பொதுமக்களும் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜரில் என்னுடன் வேறு யார் கையொப்பம் செய்தார் என்றால் காவலர் மாரியப்பன் கையொப்பம் செய்துள்ளார். எதிரியிடமிருந் கைப்பற்றபட்டுள்ள மதுபானத்தை ஆய்விற்கு அனுப்பிவைத்தோமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. கைப்பற்றியதாக சொல்லப்படும் 90 மிலி மதுபானத்தை தவிர வேறு எந்த மதுபானத்தையும் நாங்கள் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். நான் சொன்னதுபோல், சொன்னதேதியில், சொன்ன இடத்தில், எந்த சம்பவமும் நடைபெறவில்லை, நான் சம்பவம் இடத்திற்கு செல்லவில்லை, எனது மேல் அதிகாரி கேட்டுக்கொண்டதற்கிணங்க எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.